[28th March 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுசம்பந்தமாக என்னிடம் இப்போது தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : அப்ரகாம் லிங்கம் என்ற தொழிலாளர் தலைவரை, அவர் ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்த போது போலீசார் கைது செய்துகொண்டுபோனதன் மூலம் தொழிலாளர்களை வேண்டுமென்றே ஆத்திரமூட்டினார்கள் என்பதையும் அதன் விளைவாகத் தான் பிரஸ்தாப துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்பதையும் சர்க்கார் ஒப்புக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் இந்த ரிப்போர்டைப் படித்திருப்பார்கள். அவ்வாறு ஒருக்காலும் ஒப்புக் கொள்ளமுடியாது.

SRI N. MARUDACHALAM : 1956-ம் வருஷம் நடந்த இந்த சம்பவத்தைப்பற்றிய ரிப்போர்ட் 1957-ம் வருஷம் பிப்ரவரி மாதம்தான் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் காலதாமதமானதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தாரால் பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட பிறகுதான் ரிப்போர்ட் இங்கே சமர்ப் பிக்கப்படுவதற்குரிய நிலைமை ஏற்பட்டது. அதுவுமல்லாமல், பிரஸ்தாப விஷயம் கோர்ட்டில் விசாரணையில் இருந்தால், அந்தக் காலத்தில் ரிப்போர்டைப் பிரசுரிப்பதும் ' ஸப் ஜுடிஸ் ' ஆகும்.

SRI P. S. SANTHANAM : வால்ப்பாறை துப்பாக்கிப் பிரயோகத்தில் எத்தனைபேர் உயிரிழந்தார்கள், எத்தனைபேர் அங்கஹீனர்கள் ஆனார்கள் ? அங்கஹீனமடைந்தவர்கள் சர்க்காரால் மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டு சரிவர சிகிச்சையளிக்கப்பட்டார்களா ? பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நஷ்டஈடு கொடுப்பது சம்பந்தமாக தகவல் இல்லை. இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும். கனம் அங்கத்தினர், போட்ட மற்ற கேள்விகளுக்கு ரிப்போர்டிலேயே பதில் இருக்கின்றன.

Small Savings Scheme

* 26 *S.N. Q.*—SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of workers working in the Valparai Plantations, who volunteered to invest in Small Savings Scheme till 8th February 1958;

(*b*) the number of plantation owners who have advanced money to their workers for the above purpose; and

(*c*) whether any complaints have been received by Government regarding the non-co-operation of the plantation owners?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Up to 8th February 1958, 542 workers in the Valparai Plantations volunteered to invest in the Small Savings Scheme, resulting in a collection of Rs. 11,400. I have since received information that about 5,000 more workers have contributed about Rs. 1 lakh to this Small Savings Scheme.

(*b*) Five Plantation owners have advanced money to their workers but subsequently a few more Plantation owners have advanced money to their workers.

(*c*) No complaints have been received by the Government.

28th March 1958]

Sri P. S. CHINNADURAI : வால்பாறை தோட்டங்களிலுள்ள எல்லா முதலாளிகளும் சிறு சேமிப்புத் திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு அளித்திருந்தால், தொழிலாளிகள் இத்திட்டத்திற்கு அதிக பணம் கொடுக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் அல்லவா ? அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்த அந்த முதலாளிகளுக்கு அரசாங்கம் யோசனை கூறுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : முதலில் சில முதலாளிகள் தான் ஒத்துழைக்க முன்வந்தார்கள். பிறகு திட்டத்தால் ஏற்படும் நன்மைகளை உணர்ந்து இன்னும் சில முதலாளிகள் ஒத்துழைக்க முன் வந்தார்கள். அதன் விளைவாக இப்போது இன்னும் 5,000 தொழிலாளர்கள் சிறு சேமிப்புத் திட்டத்தில் சேர முன்வந்திருக்கிறார்கள். எல்லா முதலாளிகளும் போதிய அளவு ஒத்துழைக்க முன்வரவில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். இனிமேல் எல்லோரும் போதிய அளவு ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். முதலாளிகள் மட்டுமின்றி அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும். அந்த ஊரில் தங்கள் கட்சியைச் சேர்ந்த எந்தத் தொழிலாளியும் இந்தத் திட்டத்திற்குப் பணம் கொடுக்கக்கூடாதென்று கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்தார்கள். அவர்கள் அவ்வாறு பிரசாரம் செய்ததுடன் மட்டுமின்றி நேரடி நடவடிக்கை எடுக்கவும் முற்பட்டார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்கது. சிறு சேமிப்புத் திட்டத்தை ஆதரிக்கிறோம் என்று பல இடங்களில் சொல்லிவரும் கம்யூனிஸ்டு கட்சி அந்த இடத்தில் அவ்வாறு நடந்துகொண்டது மிகவும் வருந்தத்தக்கது.

Sri K. PONNIAN : சிறு சேமிப்புத் திட்டத்திற்குப் பணம் கொடுக்கக்கூடாது என்று அங்கே தொழிலாளர்களிடையே தி. மு. கழகம் பிரசாரம் செய்துவருவது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : திராவிட முன்னேற்ற கழகத்திற்கு அங்கே எந்தவிதமான ஆதரவும் இல்லை. ஆகையால்தான் அந்தக் கட்சியைப்பற்றி நான் குறிப்பிடவில்லை. கம்யூனிஸ்ட கட்சியின் சங்கங்கள் அங்கே இருப்பதால்தான் அக்கட்சியைப்பற்றிக் குறிப்பிட்டேன்.

Sri A. V. P. ASAITHAMBI : சிறு சேமிப்புத் திட்டத்திற்கு சர்க்கார் நிர்ணயித்த தொகை பூராவும் கிடைத்துவிட்டதா ? அவ்வளவு பணம் சேர்ந்துவிட்டது என்றால், இனிமேல் பணம் திரட்டவேண்டாமென்று அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்தரவு அனுப்பியிருக்கிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சிறு சேமிப்புத் திட்டத்திற்கு வேண்டிய பணத்திற்கு அளவே கிடையாது. நாம் எவ்வளவுக்கெவ்வளவு சேமிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான திட்டங்களை எடுத்துக் கொள்ள முடியும். பட்ஜெட் விவாதம் நடந்தபோது நாம் எவ்வளவு திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்பதை எல்லோரும் அறிந்திருப்பார்கள். ஆகையால் சிறு சேமிப்புத் திட்டத்திற்கு மக்களிடமிருந்து நாம் எவ்வளவுக்கெவ்வளவு பணம் சேகரிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மக்களுக்கு நன்மை செய்யமுடியும். நாங்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கினால் அதற்கும் வட்டி கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆனால் ராஜ்ய மக்களிடமிருந்தே கடன் வாங்கினால், ராஜ்ய மக்கள் வட்டி பெறமுடியும் ; நாங்கள் கொடுக்கும் வட்டிப் பணம் ராஜ்ய மக்களுக்கே போய்ச்சேரும்.

Sri V. K. KOTHANDARAMAN : சிறு சேமிப்பு இயக்கத்தை எப்போதுமே கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது கிடையாது. அந்தத் திட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஆனால் சிறு சேமிப்புத் திட்டத்திற்கு மக்களிடமிருந்து பலவந்தமாகப் பணம் வாங்கக்கூடாது என்றுதான் கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறது. இத்திட்டத்திற்கு சர்க்கார் பலவந்தமாகப் பணம் வாங்கியிருக்கிறார்கள் என்பதற்கு நான் ஆதாரம் காட்டமுடியும். ஜெயிலிலிருந்து வெளியே வந்தபிறகு தொழில் கற்றுப் பணம் சம்பாதித்துள்ள மைனர் குற்றவாளிகளிடமிருந்து இத்திட்டத்திற்காகப் பணம் வாங்கியதாக நேற்று முன்தினம்தான் கனம் உள்விவகார அமைச்சர் சொன்னார். பலவந்தமாகப் பணம் வாங்கப்படுகிறது என்பதற்கு ஆதாரம் காட்டுவதற்கு இந்த ஒரு செய்தியே போதுமானது. சிறு சேமிப்புத் திட்டத்திற்கு ஆதரவு

[28th March 1958

கொடுக்க கம்யூனிஸ்ட் கட்சி தயாராயிருக்கிறது. ஒரு சர்வகட்சி கமிட்டியைப் போட்டு திட்டத்தை அமல் நடத்தும் முறைகள்பற்றி ஆலோசிப்பதாகச் சொன்னபடியே சர்க்கார் நடக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மூலக் கேள்வி, வால்ப் பாறையில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் சிறு சேமிப்புத் திட்டத்தில் சேருவதற்கு முன்வருவதைப்பற்றியது. ஸ்ரீ. கோதண்டராமன் வேறு எதையோ குறிப்பிட்டு பிரச்னையைக் குழப்புகிறார். திட்டத்திற்கு பலவந்தமாகப் பணம் வாங்கப்படவில்லை என்று நான் நிரூபிக்க முடியும். பலவந்தம் இருந்திருந்தால், ஸ்ரீ சின்னதுரையின் கட்சியின் சங்கங்களும் இதர சங்கங்களும் விட்டுவைத்திருக்கமாட்டார்கள். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியினர்மட்டும், திட்டத்திறகு பணம் கொடுப்பதற்கு தாங்களாக முன்வந்து பணம் போடப் போய்கொண்டிருந்த தொழிலாளர்களைத் தடுத்து திருப்பியழைத்துக் கொண்டு போனதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ கோதண்டராமனுக்கும், ஸ்ரீ பழனிசாமிக்கும் ஸ்ரீ கல்யாணசுந்தரத்திற்கும் இந்த விஷயம் இதுவரை தெரியாமல் இருந்திருக்கலாம். இருந்தாலும் அவர்கள், தங்கள் கட்சியின் கொள்கைக்கு புறம்பாக, கட்சிக் கட்டுப்பாட்டை மீறி, அந்தக் கம்யூனிஸ்டுகள் ஏன் நடந்துகொண்டார்கள் என்று விசாரிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : The Communist party has always supported the Small Savings Scheme but resists only when there is compulsion. In the recent collection in Erode, six village munsifs have been suspended for not collecting money.

MR. SPEAKER : This is about Valparai. He is going round to Erode. We must confine ourselves to Valparai.

Teachers Training Institutions

* 27 *S.N. Q.*—SRI A. V. P. ASAITHAMBI (on behalf of Srimathi Sathiyavanimuthu) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether all the seats reserved for Scheduled Caste students in the Government Teachers' Training institutions have been given to them alone this year?

THE HON. SRI C. SUBRAMANIAM : In respect of Government Training Colleges the answer is in the negative. With regard to Government Training Schools, information is not available and it has been called for.

Tuticorin Port

* 28 *S.N. Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any scheme other than the Sethusamudram Scheme for the development of the Tuticorin Port ; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The development of Tuticorin into a 20 feet Harbour is under consideration and details will be finalised only after further investigation. Experimental boring operations are being conducted to determine the lay out of the Harbour and the result of the first 15 boring operations is awaited.